www.Padasalai.Net www.TrbTnpsc.com

T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண்:

*நேரம்: 3.00 மணி* **தமிழ்** *மதிப்பெண்கள்: 100*

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **15×1=15**

1. தமிழ்விடுதூது ............ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
3. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
5. *பொருந்தாத இணை எது?*
   அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
6. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
   இரண்டறிவதுவே அதனொடு நாவே
   *- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?*
   அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
7. *பொருத்தமான விடையைத் தேர்க :*
   அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
   ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
   இ) சீவகசிந்தாமணி - 3. அற இலக்கியம்
   ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
8. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ............
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
9. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?
   அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்
   இ) அள்ளல் - சேறு ஈ) மடிவு - தொடக்கம்
10. இந்திய தேசிய இராணுவத்தை .......... இன் தலைமையில் உருவாக்கினார்.
    அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
    இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
11. "மணிமேகலை" என்னும் காப்பியத்தை இயற்றியவர் .............
    அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) இளங்கோவடிகள்
    இ) திருத்தக்கத்தேவர் ஈ) நாதகுத்தனார்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



*பாட்டைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:*

"பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்
மூவாது மூத்தவர், நூல்வல்லார் ; தாவா
விதையாமை நாறுவ வித்து உள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு"

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
14. வித்து - பொருள் கூறுக.
15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

## பகுதி - II

### *பிரிவு - 1*

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க) **4×2=8**

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
17. ஏறு தழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
18. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.
19. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
20. வீணையோடு வந்தாள், கிளியே பேசு , தொடரின் வகையைச் சுட்டுக.
21. 'உடைத்து' என முடியும் திருக்குறளை எழுதுக.

### *பிரிவு - 2*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. **5×2=10**

22. *தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க :*
    அ) சித்திரமும் கைப்பழக்கம் ....................
    ஆ) கற்றோர்க்குச் சென்ற ..........................
23. *பிழை நீக்கி எழுதுக :*
    அ) சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.
    ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
24. *மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:*
    அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்
25. *கலைச்சொல் தருக:*
    அ) Volunteer ஆ) Saline Soil
26. *மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:*
    அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்
    ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது.
27. *பொருள் எழுதித் தொடரமைக்க :* பரவை, பறவை
28. *பகுபத உறுப்பிலக்கணம் தருக :* ஓம்புவார்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### *பிரிவு - 1*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2×3=6**

29. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

30. பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப்பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இவர்களில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி முதலானோர் விளங்கினர்.

1. இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படையின் பெயர் என்ன?
2. இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படையில் பெருமளவில் பங்கேற்றவர் யாவர்?
3. இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படையின் தலைவர் யார்?

31. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

**(34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)** **2×3=6**

32. இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக..

33. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

34. "காடெல்லாம்'' எனத்தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**(அல்லது)**

'சொல் அரும்' எனத் தொடங்கும் சீவக சிந்தாமணிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### *பிரிவு - 3*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **2×3=6**

35. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக. **(அல்லது)**

வல்லினம் மிகும் இடங்கள் மூன்று கூறுக.

37. "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால்பு ஊன்றிய தூண்" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கி எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **5×5=25**

38. சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

39. *நயம் பாராட்டுக :*

விரிகின்ற நெடுவானிற் கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவன!


- ம. இலெ. தங்கப்பா

40. சமூகத்திற்கு மாணவர்களாகிய உங்களுடைய பணிகள் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.

41. *மொழிபெயர்க்க :*

1. A nation's culture resides in the hearts and in the soul of its people. - Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru.
3. Union is Strength.
4. Thinking is great.
5. Walk like a bull.

42. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக:



## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 3×8=24

43. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஏமாங்கத நாட்டு வளம் குறித்து வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

45. இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

-------------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com